# அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் பாடசாலை மாணவர் இடைவிலகலும் அதற்கான காரணங்களும் - சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களை மையப்படுத்திய கள ஆய்வு

**W. Waseem Akram (1), SMM. Mazahir (2), SLM. Farshath (3), MNM. Insyraf (4), MT. Hidayathulla (5)**

[1, 3, 4 & 5] Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language, SEUSL

[2] Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, SEUSL

waseemwahab555@gmail.com, mazahirsmm@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

கல்வி மனிதனுக்கான முக்கிய உரிமையாக இருந்த போதிலும் அதனைத் தொடராகப் பெற்றுக் கொள்வதற்குத் தடையாக பல காரணிகள் உள்ளன. பாடசாலை இடைவிலகல் அவற்றுள் செல்வாக்குச் செலுத்தும் மிக முக்கிய ஒரு காரணியாகும். அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சம்புநகர் மற்றும் ஆலம்குளம் ஆகிய இரு பின்தங்கிய கிராமங்களில் பாடசாலை இடைவிலகல் அவதானிக்கப்பட்டதால் அவ்விரு பிரதேசங்களையும் மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடசாலை இடைவிலகல் இருக்கின்றதா? என்பதை கண்டறிவதோடு மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களை இனங்காணுவதையும் இவ்வாய்வு நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இந்நோக்கங்களை அடையும் வகையில் முதலாம்நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன. முதலாம்நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக நேரடியாக அப்பிரதேசங்களுக்குப் பலமுறை சென்று உரியவர்களிடம் கலந்துரையாடல்கள் நடைபெற்றது. அப்பிரதேசங்களின் பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து நேர்காணலின் மூலமும் இரண்டாம்நிலைத் தரவுகளை பாடசாலை ஆவணங்கள், பிரதேச செயலக ஆவணங்கள், ஆய்வுகள், கட்டுரைகளின் ஊடாகவும் பெறப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் Excel விரிதாள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, விபரிக்கப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசங்களில் பாடசாலை இடைவிலகல் தெளிவான காணப்படுவதனையும் அது தரம் 6-11 இல் வளர்ச்சியடைந்து வருவதனையும் கண்டறிய முடிந்தது. அத்தோடு மாணவர் இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக வறுமை, தொழில், இளவயதுத் திருமணம், பெற்றோர்களின் கவனக்குறைவு, போக்குவரத்துக் கஷ்டம், பாதுகாப்பின்மை, மாணவர்கள் கல்வியில் ஆர்வமின்மை போன்றன இனங்காணப்பட்டன. இறுதியில் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சில விதந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** கல்வி, பாடசாலை இடைவிலகல், இடைவிலகலுக்கான காரணங்கள், அட்டாளைச்சேனை

## ஆய்வுப் பின்னணி

கல்வி பெறுதல் மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாகும். இக்கல்வியை ஒவ்வொருவரும் பல விதமான முறைகளில் பெற்றுக் கொள்கின்றனர். ஒருவர் பெறுகின்ற கல்வி அவரது ஆளுமைக்கும், ஆற்றலுக்கும், திறனுக்கும் அடித்தளமாக அமைகின்றது. (*பொள்ளாச்சி நசன், 2007*) கல்வி கற்பதற்கான் உரிமை உலகளாவிய ரீதியில் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பிலும்

கல்விக்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வுரிமையை முழுமையாக பெற்றுக் கொள்ளும் உரிமை இந்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் உண்டு.

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பல வடிவங்களில் முறைமைப்படுத்தப்பட்டிருக்கின்றது. உலகில் சில நாடுகளிலே இலவசக் கல்வி முறைமை நடைமுறையில் காணப்படுகின்றது. ஒரு சில ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பக் கல்வி மாத்திரமே மாணவர்களுக்கு இலவசக் கல்வி முறைமையாக காணப்படுகின்றது. (*சமத், 2016*) ஆரம்ப கல்வி முதல் பல்கலைக்கழக கல்வி வரை இலவசக் கல்வியினை வழங்கக் கூடிய சில நாடுகளின் வரிசையில் இலங்கையும் ஒன்றாகும். இவ்வாறு இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமைக்கான காரணம் அனைவரிடத்திலும் கல்வி சென்றடைய வேண்டும் என்ற நோக்கமாகும். ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைவரும் கல்வியினை பெற்று கொள்ள வேண்டும். அதன் மூலம் ஒவ்வொருவரும் தனி மனித ஆளுமையை விருத்தி செய்து ஓர் சிறந்த சமூகத்தினை கட்டியெழுப்ப வேண்டும். இதனடிப்படையில் 5-16 வயது வரையிலான சகல பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வியினை இலங்கை கல்விக் கொள்கை பரிந்துரை செய்கின்றது. இலங்கை கல்வி நிலை மூன்றாக வகுக்கப்பட்டிருக்கின்றது.

1. ஆரம்பக் கல்வி (06-11 வயது வரை),
2. இடை நிலை கல்வி (12-18 வயது வரை)
3. உயர் கல்வி (கஸ்பியா வீவீ, 2016)

கல்வி வளர்ச்சிக்காக பல முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான முன்னேற்பாடுகளுக்கு சவாலாக அமையக்கூடிய ஓர் செயற்பாடாக பாடசாலை மாணவர் இடைவிலகல் காணப்படுகின்றது. அதாவது பாடசாலை அனுமதியை பெற்று, அதனைப் பூர்த்தி செய்யாமல் இடையிலேயே பாடசாலையை விட்டு விலகல் ‘இடைவிலகல்’ எனப்படுகின்றது. ஒரு பிள்ளை கல்வியை பெறாதிருப்பது நாட்டின் வளத்தை வீண்விரயம் செய்யும் செயலாக அமைகின்றது. இடைவிலகலினால் அரசு செலவிடும் பெறுமதிக்கு சரியான விளைவு கிடைக்காமல் போகின்றது. (*பெனாஸிர் சபூர்தீன், 2013*)

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலானது சமூகத்திற்கு பங்கம் விளைவிக்க கூடிய ஒரு செயற்பாடாகும். இது சமூகத்தில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கும் போதைப் பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், வீட்டு வன்முறை போன்ற சமூக சீர்கேடுகள் பரவலாகுவதற்கும் வழியமைக்கின்றது. ஆகவே பாடசாலை இடைவிலகல் பற்றியும் அதனால் ஏற்படும் தாக்கங்கள் பற்றியும் சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

அட்டாளைச்சேனைப் பிரதேசத்திற்குட்பட்ட சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய இரு கிராமங்களிலும் பாடசாலை மாணவர்களது இடைவிலகல் இருக்கின்றதா? இருப்பின் இடைவிலகலுக்கான காரணங்களை கண்டறிந்து, அதற்கான தீர்வுகளை முன்வைத்து, அக்கிராம மக்களிடத்தில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது.

94.49 சதுரக் கிலோமீட்டரை பரப்பளவாக கொண்ட அட்டாளைச்சேனைப் பிரதேசமானது 48,808 மக்கள் சனத்தொகையை கொண்டுள்ளது. அட்டாளைச்சேனைப் பிரதேசமானது 17 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவற்றுக்கு 17 கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இங்கு 12 பாடசாலைகள் காணப்படுகின்றன.

அட்டாளைச்சேனை 5இல் சம்புநகர், முல்லைத்தீவு, புறத்தோட்டம் என 3 கிராமங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இங்கு மொத்தமாக 306 குடும்பங்கள் காணப்படுகின்றன. அதில் கிட்டத்தட்ட 75 குடும்பங்கள் சம்புநகரில் வாழ்கின்றனர். சம்பு நகரில் அல் மினா வித்தியாலயமும் முல்லைத்தீவில் அல் ஜெஸீரா வித்தியாலயமும் காணப்படுகின்றன.

அட்டாளைச்சேனை 17 ஆலங்குளம் பிரதேசம் ஆகும். இங்கு வாழும் 488 குடும்பங்கள் 1,738 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இங்கு கரடிக்குளம் ரஹ்மானிய்யா பாடசாலை அமையப்பெற்றுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

அட்டாளைச்சேனை பிரதேசத்திற்குட்பட்ட சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களில் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் உள்ளதாக கூறப்படுகின்றது.(வலயக்கல்வி அலுவலகம்-2010) இன்னும் சில அறிக்கைகளில் அவ்வாறான இடை விலகல் இல்லை என்றும் கூறப்படுகின்றது. இப்பாடசாலைகளில் இடைவிலகல் தொடர்பாக எந்தவித ஆய்வும் இதுவரை செய்யப்பட வில்லை அந்த இடைவெளியை நிரப்புவதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. பாடசாலை இடை விலகல் நிலை எவ்வாறு உள்ளது என்பதை இனம்காணல்.
2. அவ்வாறு இடை விலகல் காணப்படின் அதற்கான காரணங்களை இணங்காணல்.
3. இடை விலகலைக் குறைப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

**ஆய்வுக் கேள்விகள்**

- ❖ சம்புநகர், ஆலம்குளம் கிராமங்களில் பாடசாலை இடை விலகல் காணப்படுகின்றதா?
- ❖ இவ்விரு பிரதேசங்களிலும் மாணவர் பாடசாலை இடை விலகலுக்கான காரணங்கள் எவை?

**ஆய்வுமுறையியல்**

இது ஒரு அளவை ஆய்வாகும். சம்புநகர் பாடசாலையில் இடை விலகியதாக கருதப்படும் மாணவர்களது பெற்றோர் (தாய் அல்லது தந்தை) 7பேர் ஆலங்குள பாடசாலையில் இடை விலகியதாக கருதப்படும் மாணவர்களது பெற்றோர் (தாய் அல்லது தந்தை) 13பேர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் சம்புநகர் பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் 3பேர் ஆலங்குள பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் 6பேர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டனர். மேலும் இவ்விரு பாடசாலை அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

1. நேர்காணல் முறை:-

தெரிவு செய்யப்பட்ட அதிபர், ஆசிரியர்கள், விலகியதாக கருதப்படும் மாணவர்களது பெற்றோர் ஆகியோரிடம் நேர் காணப்பட்டு தகவல் திரட்டப்பட்டது. நேர்காணலின் போது கேட்கப்பட வேண்டிய கேள்விகள் கல்வி ஆய்வு நிபுணர்களிடம் காண்பிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது.

2. உள்ளடக்க பகுப்பாய்வு முறை:-

மாணவர்களது வரவு அறிக்கைகள் பரீசிலிக்கப்பட்டு இடைவிலகல் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டது.

**ஆய்வுப்படிமுறைகள்**

தெரிவு செய்யப்பட்ட அதிபர், ஆசிரியர்கள், விலகியதாக கருதப்படும் மாணவர்களது பெற்றோர் ஆகியோரிடம் முன் அனுமதி பெறப்பட்டு இவ் ஆய்வின் நோக்கம் பற்றி அறிவித்ததன் பின்பு அவர்களது சம்மதத்துடன் நேர் கண்டு மற்றும் வரவு அறிக்கையில் எண்தர ரீதியாக பரீசிலித்து தகவல்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவற்றிலிருந்து முடிவுகள் பெறப்பட்டன.

**பிரதான கண்டறிதல்களும், கலந்துரையாடலும்**

ஆய்வுப் பிரதேசமான அட்டாளைச்சேனையில் அமைந்துள்ள சம்புநகர் மற்றும் ஆலம்குளம் ஆகிய கிராமங்களில் இடைவிலகல் இருப்பது கண்டறியப்பட்டது. சம்புநகர் கிராமத்தில் தரம் 1-5 வரையிலான முதல் நிலை கல்வியினை கற்பதற்கான வசதிகள் செய்யப்பட்ட அல் மினா வித்தியாலயம் காணப்படுகின்றது. இங்கு மிகவும் சொற்பமான தொகையினரே கல்வி கற்கின்றனர். இந்த ஆண்டில் (2018) மொத்தமாக 24 மாணவர்கள் இப்பாடசாலையில் தற்போது கல்வி கற்கின்றனர். இவ்வாண்டில் தரம் 1-5 வரையிலான கற்கைக்கு தகுதியுடைய மாணவர்கள் அதிகமாக இருந்தும் அவர்களில் குறைவானவர்களே பாடசாலை செல்வதில் அக்கறை காட்டுகின்றனர். இவ்வாறு பாடசாலைக்கு சமூகமளிக்காதவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியவர்களாகக் காணப்படுகின்றனர்


அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகம்(2010) பொதுவான இடை விலகல் 5% எனக் குறிப்பிடுகின்றது எனினும் இவ்விரு பாடசாலைகளிலும் 15%-20% ஆன இடைவலகல் இடம் பெற்றிருப்பதை கீழ் வரும் தகவல்கள் விபரிக்கின்றது.

**அட்டவணை 1- சம்புநகர் அல் மினா மாணவர்களின் பதிவு**

| தரம் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | **25** | **04** | **15** | **1** | **5** | **6** | **7** | **5** | **05** | **06** | **03** | **10** | **5** |
| **2** | | **17** | **05** | **13** | **4** | **5** | **6** | **6** | **6** | **05** | **05** | **02** | **10** |
| **3** | | | **10** | **08** | **13** | **4** | **3** | **11** | **11** | **6** | **04** | **04** | **01** |
| **4** | | | | **06** | **06** | **14** | **8** | **6** | **6** | **10** | **7** | **04** | **03** |
| **5** | | | | | **02** | **09** | **14** | **6** | **6** | **5** | **5** | **5** | **05** |
| **மொத்தம்** | **25** | **21** | **30** | **28** | **30** | **38** | **38** | **34** | **34** | **32** | **24** | **25** | **24** |


**மூலம்: அல்-மினா வித்தியாலய தினவரவு இடாப்பு (2006 - 2018)**

அட்டவணை (1) பாடசாலை இடைவிலகல் இடம் பெற்றதை எடுத்து காட்டுகின்றது. 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 25 பேர் அனுமதி பெற்றுள்ளனர், 2007ஆம் ஆண்டில் 2ஆம் தரத்தில் 17 பேரும் 2008இல் 3ஆம் தரத்தில் 10 பேரும், 2009இல் 4ஆம் தரத்தில் 6 பேரும், 2010இல் 5ஆம் தரத்தில் 2 பேரும் கல்வி கற்றுள்ளனர். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் இடைவிலகல் இடம்பெற்று ஆரம்ப அனுமதி பெற்ற 25 பேரில் இரு மாணவர்கள் மாத்திரமே இறுதியில் கல்வியை தொடர்ந்துள்ளனர். இந்த அடிப்படையில் இடைவிலகல் இடம்பெற்றிருப்பதை காண முடிகின்றது. இக்காலகட்டத்தில் இடம்பெற்றுள்ள இடைவிலகலை வரைபடம் (1) காட்டுகின்றது.




வரைபடம் - 1 - சம்புநகர் அல் மினா மாணவர்களின் பதிவு

ஒரு தொகுதியில் ஆரம்பத்தில் அனுமதி பெறும் மாணவர்களை விட அதற்கு அடுத்த ஆண்டுகளில் அதே தொகுதியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றமையையும் சிலபோது இங்கு அவதானிக்க முடிந்தது. இதற்கு சம்புநகர் பிரதேசத்திற்கு விவசாயம், விலங்கு வேளான்மை போன்றவற்றுக்காக தற்காலிகமாக வந்து தங்கியிருப்பவர்களின் பிள்ளைகளின் அனுமதியைக் காரணமாக குறிப்பிடலாம். அவ்வாறானவர்களைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்களை கட்டாயப்படுத்தி பாடசாலையில் இணைத்துக் கொண்ட தகவல்கள் அதிபரின் நேர்காணலின் ஊடாகப் பெறப்பட்டது. அவ்வாறான அதிகரிப்பை 2007ஆம் வருட மாணவ தொகுதியில் காணக்கூடியதை வரைபடம் (2) விபரிக்கின்றத.




வரைபடம் 2 – 2007ஆம் வருட மாணவர் தொகுதியினர்

ஆனால் இடைவிலகல் தற்காலிகமாக வருபவர்கள் மூலம் மாத்திரமன்றி அப்பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாக கொண்ட மாணவர்களின் மூலமும் இடம்பெற்றுள்ளது என்பதை பாடசாலை வரவு இடாப்பு, அதிபர் நேர்காணல் மூலம் அறியக் கூடியதாக இருந்தது.

ஆய்வுப் பிரதேசமாக எடுத்துக் கொள்ளப்பட்ட மற்றுமொரு கிராமமாகிய ஆலம்குளத்தில் சாதாரண தரம் வரையிலான கல்வியினை கற்பதற்கான வசதியினைக் கொண்ட பாடசாலையாக கரடிக்குளம் ரஹ்மானிய்யா வித்தியாலயம் காணப்படுகின்றது. இங்கு தற்போது 234 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். இக்கிராமத்தில் தரம் 1-11 வரையில் கல்வியைத் தொடரக் கூடிய மாணவர்களது முழுப் பங்களிப்பும் பாடசாலை வரவில் இல்லை. அனுமதி பெற்ற மாணவர்களும் ஓர் சீரான வருகை நிலையை கொண்டிருப்பதில்லை. மாணவர் இடை விலகல் வளர்ச்சியும் இதற்கான காரணமாக அமைகின்றது.

அட்டவணை 2 - கரடிக்குளம் ரஹ்மானிய்யா வித்தியாலயாலய மாணவர் அனுமதி


**(2008 - 2018)**

| தரம் | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 29 | 19 | 26 | 29 | 23 | 31 | 26 | 30 | 31 | 15 | 22 |
| 2 | 31 | 30 | 20 | 25 | 30 | 24 | 34 | 27 | 30 | 34 | 17 |
| 3 | 30 | 31 | 31 | 22 | 24 | 30 | 23 | 32 | 26 | 29 | 31 |
| 4 | 18 | 30 | 28 | 27 | 24 | 20 | 30 | 28 | 32 | 28 | 26 |
| 5 | 21 | 16 | 31 | 29 | 26 | 20 | 20 | 25 | 29 | 32 | 28 |
| 6 | 20 | 21 | 14 | 33 | 28 | 32 | 28 | 18 | 24 | 31 | 28 |
| 7 | 19 | 19 | 19 | 13 | 31 | 33 | 22 | 25 | 19 | 21 | 25 |
| 8 | 25 | 15 | 12 | 20 | 14 | 19 | 28 | 25 | 22 | 19 | 21 |
| 9 | 14 | 18 | 2 | 12 | 20 | 15 | 18 | 21 | 18 | 25 | 16 |
| 10 | - | - | 9 | 0 | 6 | 22 | 11 | 12 | 8 | 9 | 12 |
| 11 | - | - | - | 4 | 0 | 0 | 11 | 8 | 8 | 6 | 8 |
| மொத்தம் | 207 | 199 | 192 | 214 | 226 | 246 | 251 | 251 | 247 | 249 | 234 |

மூலம்: கரடிக்குளம் ரஹ்மானிய்யா வித்தியாலய தினவரவு இடாப்பு (2008 - 2018)

அட்டவணை 2 இடைவிலகல் இடம் பெற்றதை காட்டுகின்றது. 2008ஆம் ஆண்டில் ஆரம்ப அனுமதியாக 29 மாணவர்கள் இருந்த போதிலும் அவர்களுள் சாதாரண தரம் வரை சென்றவர்கள் 08 மாணவர்கள் மாத்திரமேயாவர். இடைப்பட்ட ஆண்டில் சில மாணவர் தொகை அதிகரிப்பை காணலாம். இக்கிராமத்தில் தற்காலிகமாக வந்தவர்களது பிள்ளைகளின் அனுமதி மற்றும் சம்புநகர் கிராமத்திலிருந்து தமது இடை நிலைக் கல்வியைத் தொடர வந்தவர்கள் என ஆய்வில் அறியப்பட்டது. அவர்கள் உட்பட அதன் பின்னரான ஆண்டுகளில் அனைவரினதும் பங்களிப்பு பாடசாலை வருகையில் இருக்கவில்லை. மாறாக இடை விலகல் இருப்பதை அறிய கூடியதாக இருந்தது. அவற்றில் தற்காலிகமாக வருபவர்களின் மூலம் மாத்திரமன்றி அப்பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாக கொண்ட


மாணவர்களின் மூலமும் இடைவிலகல் இடம்பெற்றுள்ளது என்பதை பாடசாலை வரவு இடாப்பு, அதிபர் நேர்காணல் மூலம் அறியக் கூடியதாக இருந்தது. 2008ஆம் தொகுதி மாணவர்களது ஆரம்ப அனுமதி தொடக்கம் அவர்களது இறுதி நிலை தொடர்பான விபரிப்பை வரைபடம் 3இல் காணலாம்.




வரைபடம் 3 - 2008ஆம் வருட மாணவர் தொகுதியினர் (தரம் 1-11)

மாணவர் இடைவிலகலைத் துல்லியமாக அறிந்து கொள்வதற்கு 2018ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்களை ஆரம்ப மாணவர்களின் தொகையோடு ஒப்பு நோக்கிப் பார்த்தால். ஆரம்ப அனுமதி பெற்ற 30 மாணவர்களுள் (2015) தற்போது (2018) தரம் 4இல் நான்கு மாணவர்கள் இடைவிலகி 26 மாணவர்கள் உள்ளனர். 2013இல் ஆரம்ப அனுமதி பெற்ற 31 மாணவர்களுள் தற்போது (2018) தரம் 6இல் 28 மாணவர்கள் உள்ளனர். தரம் 8இல் தற்போது கற்கும் 21 மாணவர்கள், ஆரம்பத்தில் (2011) 29 பேர் இருந்தனர். ஆரம்ப அனுமதி பெற்ற 26 மாணவர்களுள் (2010) தற்போது (2018) தரம் 9இல் 16 மாணவர்கள் உள்ளனர். 2009இல் ஆரம்ப அனுமதி பெற்ற 19 மாணவர்களுள் தற்போது தரம் 10இல் 12 மாணவர்களே கல்வியைத் தொடர்கின்றனர். அதேவேளை, 2008இல் அனுமதி பெற்ற 29 மாணவர்களுள் தற்போது தரம் 11இல் 08 மாணவர்கள் உள்ளனர்.

இந்த அடிப்படையில் நோக்கும் போது ஒவ்வொரு வருடமும் இடை விலகல் வீதம் காணப்படுகிறது. மேலும் ஒவ்வொரு வகுப்பையும் தனியாகப் பார்க்கும் போது ஆரம்ப நிலையிலிருந்து இறுதி நிலையை அடையும் போது அதிக அளவிலான இடை விலகல் வளர்ச்சியை காணக்கூடியதாக உள்ளது. (வரைபடம் 3) எம்மால் பகுப்பாய்வு செய்யப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் இடைவிலகல் வீதம் ஆரம்பப் பிரிவில் துல்லியமாகத் தெரியாவிட்டாலும் தரம் 6-11 வரையான முக்கிய தரங்களில் அவற்றின் வீதம் மிகத் தெளிவாகத் தெரிவதை வரைபடம் (4) காட்டுகின்றது




இதற்கான காரணங்களை கண்டறியுமுகமாக சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களின் பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களின் கருத்துக்கள் நேர்காணல் மூலம் வினவப்பட்ட போது பெரும்பான்மையான காரணங்கள் ஒத்த தன்மையினையே கொண்டிருந்தது. மாணவர் இடைவிலகலுக்கு முக்கிய காரணங்களாக வறுமை, போக்குவரத்து சிரமம், பெற்றோர்களது கவனயீனம், மாணவர்களிடத்தில் ஆர்வமின்மை, இளவயதுத் திருமணம் மற்றும் பாதுகாப்பின்மை என்பன எடுத்துக் கூறப்பட்டன.

சம்புநகர் கிராம மாணவர்கள் தரம் ஐந்து வரை இடை விலகல் இல்லாமல் கற்றாலும் அவர்களது இடைநிலை கல்வியை பயில ஆலங்குளம் அல்லது அட்டாளைச்சேனைக்கு செல்ல வேண்டியுள்ளது. அது போலவே ஆலங்குள கிராம மாணவர்கள் தரம் 1-11 வரையில் கல்வியினை இடைவிலகலின்றி பயின்றாலும் அடுத்த கட்டமாக உயர் தரத்தினை மேற்கொள்ள அட்டாளைச்சேனைக்கு செல்ல வேண்டியுள்ளது. அங்கு செல்வதற்கு போக்குவரத்து வசதி இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆலங்குளத்திலிருந்து அட்டாளைச்சேனைக்கு 10மஅ உம் சம்புநகரிலிருந்து அட்டாளைச்சேனைக்கு 6மஅ தூரமும் இதற்கான பிரதான காரணமாகும். இப்பிரதேசங்களில் அரசாங்க போக்குவரத்து வசதி முற்றிலும் இல்லை. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் என்ற வகையில் வெளியிடங்களுக்கு தம் பிள்ளைகளைக் கல்வியினைத் தொடர அனுப்புவதற்கு சொந்த வாகனமின்மை மற்றும் கூலி வாகனங்களிலும் பிள்ளைகளை அனுப்ப முடியாத வறுமை நிலை காணப்படுகின்றது. பெண் பிள்ளைகளுக்கு ஒழு***வரைபடம் 4***பாதுகாப்பு போக்குவரத்தின் போதும் வெளி இடங்களில் கற்கும் போதும் இல்லை என அம்மக்கள் எண்ணுகின்றனர். தமது பிள்ளைகளை தமது பொறுப்பிலே பாடசாலைக்கு அழைத்து செல்ல முடியாத நிலை காணப்படுகிறது ஏனெனில் அவர்கள் வேலைக்கு சென்று உரிய நேரத்திற்கு சமூகமளிக்க முடிவதில்லை. மாலை நேரங்களில் யானைகளின் தொந்தரவும் இங்கு உண்டு. அதுவும் மாணவர்களின் கல்வியில் தாக்கம் செலுத்துகின்றது.

ஆலம்குளத்தைச் சேர்ந்த உயர்தரம் கற்றுக் கொண்டிருக்கும் ஒரு மாணவியை நேர்கண்ட போது அவருடைய சக தோழிகள் 08 பேர் உயர் தரத்திற்கு தேர்ச்சி பெற்ற போதிலும் 03 பேர் மாத்திரமே உயர் தரத்தினைத் தொடர்கின்றனர் எனக் கூறினார். மற்றைய 05 பேரும் இடை விலகியமைக்கு முக்கிய காரணங்களாக போக்குவரத்துக் கஷ்டத்தையும் பெண் பிள்ளைகளுக்கான பாதுகாப்புப் பிரச்சினையையும் சுட்டிக் காட்டினார்.

பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் கல்வியில் கவனயீனமாக இருப்பதன் காரணமாக ஆண் பிள்ளைகளை தமது தொழிலுக்கு உதவியாகவும் பெண்பிள்ளைகளை வீட்டு வேலைகளை கவனிக்கவும் பணிக்கின்றனர். அவர்கள் பிள்ளைகளது எதிர்காலம் கல்வியில் தங்கியிருப்பதை கவனத்தில் கொள்ளாதது மட்டுமல்லாது அவர்களது இச்செயற்பாட்டிற்கு வறுமையைக் காரணம் காட்டுகின்றனர். சிலரது பெற்றோர் வெளிநாட்டில் வேலை செய்யக் கூடியவர்களாக காணப்படுகின்றனர். அவர்களது பிள்ளைகளை பராமரிக்கின்ற பாதுகாவலர்கள் அப்பிள்ளைகளை கவனிக்கக் கூடியவர்களாக இருந்த போதிலும் கல்வி பற்றி விசாரித்த போது அதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இந்நிலையிலுள்ள ஒரு மாணவனை சம்பு நகரில் நேர்கண்ட போது அவர் 3ஆம் தரத்தோடு இடை விலகி கல்முனை மத்ரஸா ஒன்றில் பயிலக் கூடியவராக இருக்கின்றார். அவரது சகோதரர் பாடசாலைக் கல்வியை சீராக தொடர்வதில்லை. பெற்றோர்களும் பாதுகாவலர்களும் கல்வி பற்றிய ஓர் விழிப்புணர்வை கொண்டிராமையே இதற்கான பிரதான காரணமாக அடையாளம் காணப்பட்டது.

இளவயதுத் திருமணமும் பாடசாலை இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு காரணியாக உள்ளது. சிலரை நேர்கண்ட போது பிள்ளைகள் சிலர் இளம் வயதிலேயே தமது தாய் அல்லது தந்தையை இழந்தவர்களாக இருக்கின்றனர். கணவனை இழந்த பெண் குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக கூலி வேலைக்கு செல்கின்றாள். இதனால் வீட்டு வேலைகளைச் செய்ய தனது பிள்ளையை நியமிக்கின்றாள். இப்பின்னணியில் இக்கிராம மக்கள் குடும்பச் சுமையை குறைத்தல் என்ற அடிப்படையில் முதிர்ச்சியடையாத தமது பிள்ளைகளைத் திருமண பந்தத்தில் இணைத்து விடுகின்றனர். பலர் இந்நிலையை மனக் கசப்புடனே ஏற்றிருந்தாலும் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கின்றன. 50 தம்பதியினர்களை எடுத்து நோக்கிய போது அவற்றில் 03 தம்பதியினர்களே 18 வயதிற்கு பின்னர் திருமணம் செய்து கொண்டவர்களாக இருந்தனர்.

மேற்கூறப்பட்ட போக்குவரத்துப் பிரச்சினை, பெற்றோர்களது கவனயீனம், இளம் வயதுத் திருமணம் போன்ற எல்லாக் காரணிகளிலும் வறுமை முக்கிய பங்களிபை வகிக்கின்றது.

**பரிந்துரைகள்**

ஆய்வுப் பிரதேசங்களில் பாடசாலை இடைவிலகலைக் குறைப்பதற்கு அல்லது அதனை முற்றாக இல்லாமற் செய்வதற்கு கீழ்வரும் விடயங்களை பரிந்துரை செய்யலாம்.

- வறுமையை இல்லாமச் செய்வதற்காக வேண்டி ஊர் மக்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க உரிய பொறுப்புதாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.
- பைதுஸ் ஸகாத், பைதுல் மால் மற்றும் பொதுநல அமைப்புகள் இப்பிரதேச மக்கள் விடயங்களில் கவனம் செலுத்தி, அவர்களின் வாழ்வியலை மேன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- பிரதேச அரசியல்வாதிகள் இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு காத்திரமான செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

- ❖ பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு செல்ல கூடிய வகையிலும் பாடசாலை விட்டு வரக் கூடிய நேரத்திற்கும் அரச போக்குவரத்து சேவையினை ஏற்படுத்தல்.
- ❖ இளவயதுத் திருமணத்திற்கு எதிராகவும் பாடசாலை செல்லக் கூடிய வயதில் தொழில் செய்வதற்கு எதிராகவும் ஊர் மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- ❖ பெற்றோர்களிடத்திலும் மாணவர்களிடத்திலும் கல்வியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தல்.
- ❖ மாணவர்களுக்கு பாடசாலையுடன் மிக நெருங்கிய உறவை உண்டு பண்ணும் வகையில் ஆசிரியர்கள் செயற்படல்.
- ❖ பாடசாலை இடை விலகலை தடுக்கும் நோக்கில் சில கட்டாய நடவடிக்கைகளை ஊர் மக்கள் செய்ய முன்வரவேண்டும்.

**முடிவுரை**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களை ஒப்பு நோக்குமிடத்து இவ்விரு கிராமங்களிலும் மாணவர் இடைவிலகல் இடம் பெற்றுள்ளதை எடுத்துக் காட்டுகின்றதை நேர்காணலின் போது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும் பாடசாலையில் ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும் கண்டறியப்பட்டது. இதற்கு வறுமை மற்றும் கல்வியில் கவனயீனமே இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இவற்றை மையமாக வைத்து, சமூக ஆர்வளர்களும் பொது அமைப்புகளும் தமது செயற்திட்டங்களை அமைத்துக் கொள்வதற்கு இவ்வாய்வின் கண்டறிதல்கள் துணையாக அமையவல்லது.

**உசாத்துணைகள்:**


- ✓ அமீன், எம்.எப், அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர், (11.07.2018), அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகம்.
- ✓ கஸ்பியா வீவீ ஏ.எம், (08.09.2017), “பாடசாலை இடைவிலகல் காரணங்கள் கண்டறியப்பட வேண்டும்”, தினகரன், Retrieved from http://ww.thinakaran.lk [accessed]: [11.07.2018].
- ✓ சமத் எம்.எம்.ஏ, (14.01.2016), “இலவசக் கல்வி பாதுகாக்கப்படுமா?”, Retrieved from http://www.srilankanmuslims.lk [accessed]: [11.07.2018].
- ✓ பெனாஸிர் சபுர்தீன், (02.01.2016), “இலங்கையின் கல்வித்துறையில் மாணவர்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகள்”, Retrieved from http://www.thinakaran.lk [accessed]: [11.07.2018].
- ✓ பொள்ளாச்சி நசன், (15.10.2018), “கல்வி என்றால் என்ன?” Retrieved from http://www.thamizham.net [accessed]: [11.07.2018].
- ✓ மாணவர் வரவு இடாப்பு, (17.06.2018), சம்புநகர் மற்றும் ஆலம்குள பாடசாலைகள்.